1360 / 1360

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இயற்றிய

வரகவி தாகூர்

(கவி ரவீந்திரநாதர் வரலாறும், திருமொழிகளும்)

OFFICE OF THE ... 17 MAR 1938

3434

3487

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம்

திருச்சி ஜில்லா

1937

உரிமை பதிப்புற்றது] [விலை அணா 3

அன்பு மலர்—௯

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இயற்றிய

வரகவி தாகூர்

(கவி ரவீந்திரநாதர் வரலாறும், திருமொழிகளும்)

3434

928.91441

OFFICE OF THE REGISTRAR OF ...
17 MAR 1938

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம்
திருச்சி ஜில்லா
1937

உரிமை பதிப்புற்றது] [விலை அணா 3

Printed at The
Jupiter Press, G.T., Madras.

முன்னுரை

எமது நிலயத்தின் ஐந்தாவது அன்பு மலரை, உலகன்னை திருவடியில் வைத்து வணங்குகிறோம். மனித சமுதாயத்திற்கு, அறிவு, ஆற்றல், கலை, வீரம், அரும் பணிகளால் உதவிய பெரியார் வரலாறுகளையும், திருவாக்குகளையும் வெளியிட்டுதவுதல் எமது நிலயக் கொள்கைகளில் ஒன்று. அதை நிறைவேற்றத் தாகூரை முதலில் வெளியிடுகிறோம். தாகூர் ஒரு கவிக் கதிர். பாரத மாதாவின் புகழை விவேகானந்தர் சிகாகோ மேடையில் உலகறிய விளக்கினார். அதன் பிறகு நமது வரகவி தாகூர், உலகின் உள்ளத்தில் பாரத வாணியின் அழகையும், ஆழ்ந்த பொருளையும் நன்கு நிலை நாட்டினார். தாகூர் விஸ்வபாரதி, அகிலாண்ட கவி. மேற்கும் கிழக்கும் தாகூர் வாணியைப் போற்றிப் புகழ்கின்றன. எல்லா மொழிகளிலும் தாகூர் கீதங்கள் பெயர்க்கப்பட்டுள்ளன. நமது தமிழருக்குத் தாகூரின் வரலாறும், திருவாக்கின் சுவையும் சிறிது விளக்கவே இந்நூலை வெளியிட்டோம். தாகூரின் கவிதைச் சுவையும், அதிலுள்ள கடவுட் பொருளும் தமிழர் இரத்தத்தில் ஊறிப் புது யுகக் கவிகளை மலர்விக்கட்டும்.

இவ்வரிய நூலை எழுதிய சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் தாகூர் வாக்கினிமையை முதன் மொழியிலேயே நன்கு சுவைத்துள்ளார். இங்

னூலை வெளியிடப் பொருளுதவித் தூண்டிய கண்டனூர் அன்பர் வயி. ராம. ப. பழநியப்பாவுக்கு எமது நன்றி பெரிதும் உரியது. தாகூரின் தாய்மொழிப் பற்று நமது தமிழர் உள்ளத்திற் பற்றிக் கொழுந்தேறுக.

"போற்றுக தாய்மொழியைப் பொன்போற் புறநயங்கள்
ஏற்றுக நாளு மெழில்."

அன்பு நிலயத்தார்,
இராமச்சந்திரபுரம்,
திருச்சிராப்பள்ளி ஜில்லா.

வரகவி தாகூர்

ஓம் சுத்த சக்தி

வரகவி தாகூர்

---

௧. வங்கக் கலை

காவியம், ஓவியம், நடனம் ஆகிய இம் மூன்றிலும் வங்கக் கலை உலகெங்கும் புகழ்பெற்று விளங்குகிறது. கவீந்திரரான இரவீந்திரர், சித்திரப்புலவர் அபினீந்திரர், நடனானந்தரான உதயசங்கர் ஆகிய இம்மூவரும் உலகின் உள்ளத்தைக் கவர்ந்துள்ளனர். இரவீந்திரர் கவிவாணி உலகை திக்விஜயம் செய்துள்ளது. இதுகாறும் எவரும் பெறாத அற்புதப் பெருமை தம் காலத்திலேயே தாகூருக்குக் கிடைத்துள்ளது. பாரத தேவியின் அருங்கலைச் சுடர் இன்றும் தெய்வக்கதிர் பரவியொளிர்வதற்குத் தாகூர் ஒரு அறிகுறி. வங்கநாடு நவபாரத நாகரிகத்தின் தொட்டில். பாரதான்மாவை உலகறிய விளக்கிய பெருமை வங்கமாதாவிற்கு உரியது. ராஜாராமோஹன்ராய், மகரிஷி தேவேந்திர நாதர், இராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், ரிஷி பங்கிம், ஜகதீச சந்திரவசு, பகவான் அரவிந்தர், வரகவி தாகூர் முதலிய பெரியார்களை உலகம் என்றும் மறக்கமுடியாது.

வங்கர், தமது நாட்டையும் புலவர் மணிகளேயும் உலகறியக் கொண்டாடுவது தகும், தகும். தன்னுயிர் போயினும் வங்காளி தாய்நாட்டை மறக்கமாட்டான். "மா, மா, வந்தேமாதரம்" என்று வங்காளி உயிர்க்கிருன். அந்தத் தாயன்பிலும், மொழிப்பற்றிலும் பத்திலொருபங்கு தமிழருக்கு இருக்குமானுல்......!

"ஆமார ஸோனர் பாங்கலா
அமி தொமாய் பாலபாஸி
சிரதின தோமார் ஆகாஸ், தோமார் பாதாஷ்
ஆமார் ப்ராணே பாஜாய் பாங்ஸி."

"எமது தங்கமான வங்காளமே, உன்னிடம் அன்பு கோண்டோம். என்றென்றும், நினது வானும், நினது காற்றும் எங்கள் பிராணனில் பூங்குழலூதுகின்றன." இந்தத் தாகூர் வாக்கை அறிந்துணராத வங்காளி இல்லை.

நாட்டைப்போலவே தனது கலேச் செல்வத்தையும் வங்காளி நாளோரு மேனியும், பொழுதோரு வண்ணமுமாக வளர்க்கிருன். காளிதாஸன், கீத கோவிந்தம் இரண்டும் வங்கக் கலேயின் ஊற்றுக்கண்கள். இரண்டும் மேனுட்டில் புகழ்பெற்று விளங்குகின்றன. இத்துடன் காளி, ராதை, கண்ணன் ஆகிய இஷ்ட தெய்வங்களின் மேல் ஏராளமான பாட்டுக்கள் முழங்குகின்றன. சண்டிதாஸ், வித்யாபதி, ராமப்ரஸாத் முதலிய பக்தர்களின் பாடல்கள் வங்கமெங்கும் ஒலிக்கின்றன. ராமப்ரஸாத், வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் இருந்தவர். இவர் பாடிய சக்தி கீர்த்தனேகள் பரமஹம்ஸரைப் பரவசப்படுத்தின. சைதன்ய பக்தியில் எழுந்த சங்கீர்த்தனங்கள் பல. சக்தி வழிபாடும், கண்ணன் வணக்கமும் வங்க சமுதாயத்திற்கே ஒரு

வீறும், அன்புக் கனலும் அளித்தன. அழகு, அன்பு ஆகிய இரண்டும் வங்கர் வாழ்வின் இரண்டு உயிர்நாடிகள். ராஜாராமமோஹன் காலத்திலிருந்து, வங்கக் கலை மேனுட்டின் புலமையுடன் கலந்து உலகளாவத் தொடங்கியது. ஈஸ்வரசந்திர வித்யாஸாகர், ஹேமசந்திர பனர்ஜி, மைகேல் மதுஸூதனன், நபின் சந்திரஸென், ரிஷி பங்கிம் முதலிய அருங்கலைவாணர் ஆங்கிலக் கலை விநோதர். மைகேல் மதுஸூதனர் வங்காளத்தின் மில்தன். கம்பனைப்போல இவர் இராமாயணம் (மேகநாத் காவியம்) பாடினர்; நடை ஆரியம் கலந்து பழம் புலவர் நடைபோலக் கம்பீரமாயிருக்கும். பங்கிம் சந்திரர் வங்கநாட்டின் ஸ்காட். இவர் தாம் பாரத தேவியின் சக்தி வடிவைக் கண்டு, வந்தே மாதரம் என்னும் பாரதோபநிஷத்தைப் பாடி, நாட்டில் தாயன்பை யூக்கியவர். இந்தத் தீர்க்கதரிசியார் அன்னைக்காக ஆனந்த மடம் கட்டினர். அதை விஸ்வபாரத நிலயமாக்கி, அன்னையின் அத்யாத்மப் பெருமையும், திருவுள்ளமும் உலகறியச் செய்தது இரவீந்திரரின் வரம் பெற்ற கவிவாணியே.

உ. தாகூர் குடும்பம்

தாகூர் குடும்பம், பரம்பரையாகக் கல்விக்கும், செல்வத்திற்கும், செல்வாக்கிற்கும் பேர் போனது. தாகூர் பாட்டனர் ராஜா துவாரகநாத தாகூர் ராமோஹன் ராயின் அருமை நண்பர்; இங்கிலாந்து, ப்ரிஸ்டலில் அடங்கிய ராமோஹன் சமாதியின்மீது இவரே கோயில் எழுப்பினர்; பிரம சமாஜத்தை முறையாக நடத்தித் தமது மைந்தர் மஹரிஷி தேவேந்திர

நாதரிடம் ஒப்புவித்துச் சென்ருர். ராமோஹன் பிரம சமாஜம் தொடங்கினர்; தேவேந்திரர் முறை வகுத்து நிலைநாட்டி நடத்தினர். தேவேந்திரநாதரின் தற்சரிதம் வெகு இனிமையாயிருக்கும். திருவும் கலையும் சேர்ந்துவிளங்கும் இந்த மஹரிஷியின் அருந் தவப் புதல்வரே நமது விஸ்வ கவிஞர். இரவீந்திரர் **6-5-1861**-ல் பிறந்தார். இரவீந்திரன் என்பதற்கு "சூரிய ராஜன்" என்பது பொருள். பேருக்கேற்ற படியே கலையுலகின் இரவியாக அவர் விளங்குகிருர். தாகூரின் தாய் நற்குணவதியான ஸாரதாதேவி. கலைம களுக்கும் திருமகளுக்கும் பொருத்தம் இல்லை என்பர். அது தாகூர் குடும்பத்திற் பொய்த்தது. துவாரகநாத ரின் தாராளச் செலவால் கொஞ்சம் கடன் இருந்தது. அதை மகன் தீர்த்துவிட்டான். தாகூர் குடும்பத் திற்குப்போல்பூரில் ஏராளமான நிலம் உண்டு. உண்ண உடுக்கக் குறைவில்லை. குடும்பத்தவர், அறிவு வளர்ச்சி யிலும், அருங்கலை வளர்ச்சியிலும் சிறந்தோங்கினர். தேவேந்திரர் மூத்தமகன் த்விஜேந்திரநாதன் பெரிய வேதாந்தி; நாவலன். அடுத்த தமயன் ஜோதீந்திரன் சித்திரம் வல்லான்; சுதேசிக் கப்பல் நடத்தினன். அடுத்தவன் ஐ. ஸி. எஸ். தாகூரின் மைத்துனர் அப னீந்திரநாதரும், கஜேந்திரநாதரும் புகழ்பெற்ற ஓவி யப்புலவர்கள். குடும்பத்தில் எல்லாருக்குமே சங்கீதம் வரும். பாட்டும், கலையும், தூய சுற்றமும் விளங்கும் இக்குடும்பமே நமது கவிஞருக்கு ஒரு அருங்கலைச் சாலையா யிருந்தது. காளிதாஸன் படித்த இயற்கைப் பள்ளிக்கூடத்திலேயே நமது பிறவிக் கவிஞரும் கற்றுத் தேர்ந்தார்.

௩. இளந் தாகூர்

தாகூர் இளமையில் தாயை இழந்தார். அவர் தந்தையார் தியானத்தையும் தனிமையையும் மேற்கொண்டு இருந்தார். ஆதலால், தாகூர், சேவகர் காப்பில் வளர்ந்தார். அவருக்கு வீட்டு உபாத்தியாயர் ஏற்படுத்தப்பட்டனர். பள்ளிக்கூடத்திற்கு அவர் அனுப்பப்பட்டார்; அவருக்குப் படிப்பில் அக்கறையில்லை. கதை, பாட்டு, நாடகம் என்றால் அவர் பிரியப்படுவார்; நீலவான், விண்மீன்கள், வெண்மதி, காலைக் கதிர், கங்கைக்காட்சி, தோட்டம், துறவுகள், மனிதர் வாழ்வு, அனைத்தையும் கூர்ந்து கவனிப்பார். தாகூர் பங்களா மிகப் பெரிது. தாகூர் அதன் திண்ணையிலமர்ந்து, முன்னே செல்லும் மாந்தர் இயல்பைப் பார்த்துக் கொண்டே யிருப்பார். எதிரே பல ஏழைகளின் சிறு குடில்கள் இருக்கும். அதிலுள்ளவர் படும் துயரங்களை அவர் கண்டுருகுவார். அருகே ஒரு குளம் உண்டு. அதில் நீராட வருவோரை அவர் கவனிப்பார்; அவர்கள் பேசும் வார்த்தைகளை யெல்லாம் மனத்தில் வாங்கிக் கொண்டு சிந்திப்பார். அவர் வீட்டிற்குள் பாட்டும், நாடகமும், இலக்கியங்களும் முழங்கும். இரவீந்திரர் கூச்சமுள்ள சிறுவர்; அனைத்தையும் பேசாமல் பார்த்துக்கொண்டே யிருப்பார். வீட்டில் பெண்களும் நன்றாகப் பாடுவர். தமயன் ஜோதீந்திரன் மனைவிதான் தாகூரை அன்புடன் பேணியவள். அவளிடமே நெருங்கிப் பழகுவார் நமது இயற்கைப் புலவர்; ஒரு நாள், கல்கத்தாவினின்று வெளியே சிறிது தூரம் நடந்து, காலையின் மாசற்ற அமைதி யழகைப்

பார்த்துச் சொக்கி நின்ருர். அவருள் ஒரு ஆவேசக் கனல் பிறந்தது. அவர், காலை, மாலைக் கதிர்முகங் கண்டு அளவற்ற பரவசம் அடைவார். அக்கதிர்களே இளந் தாகூரின் கவிப் புலமையைத் தூண்டின. “காலையின் திருமுகத்தைக் காணும்போதெல்லாம் ஒரு புதிய பொற்கடிதத்தைக் கொண்டு நாள் என் முன் நிற்கும். அதைத் திறந்து பார்க்கையில் இதுகாறும் கேட்டிராத ஒரு அதிசயச் செய்தி கிடைக்கும். காலையின் அழகைக் காண, உடனே உடை மாட்டிக்கொண்டு புறப்படுவேன்” என்கிருர் கவிஞர் தமது குறிப்புகளில். வீட்டிற்கு அருகே ஒரு தோட்டமும், அதற்கப்பால் கங்கையும் உண்டு. காளிதாஸனை ஆவேசப்படுத்தியது கம்பீர மலைக் காட்சி. சம்பனை ஆவேசப்படுத்தியது காவிரியின் காட்சி. தாகூரை ஆவேசப்படுத்தியது கதிர்களை அணிந்து தங்கமயமாக விளங்கும் கங்கையின் காட்சி. “எங்கேயாவது ஓடிப்போனுல், எவ்வளவு ஏகாந்தமாய் இருப்பேன். கட்டுப்பட்ட வாழ்வில் அமைதி காணவில்லையே” என்று துடிப்பார் நம் கவிஞர்; வெளியே சென்று, மாந்தர் மனப்பான்மையை அறியப் பதறுவார்.

“ஹ்ருதே ஹமாரா க்ரந்தன் கரே
மானவ ஹ்ருதயே மிளிதே,
நிகிலேர் ஸாதே மஹா ராஜபதே
கேலிதே திவாஸ நிசிதே!”

“மானிட இதயங்களுடன் கலந்து உறவாட என் மனம் அவாவிக் கூவுகிறது; இரவும் பகலும் பெரிய ரஸ்தாக்களில் உலகுடன் விளையாட அவாவுகிறது” என்கிருர் தாகூர். அவருக்குப் பதின்மூன்று வயதில்

காயத்திரி உபதேசம் செய்யப்பட்டது. தகப்பனர் வெளியே போகும்போதெல்லாம் தம் இளந் தாகூரை இட்டுச்செல்வார். இவ்வாறு இவர்கள் போல்பூருக்குச் செல்வதுண்டு. தகப்பனரின் தியானமும், சாந்த வாழ்வும், கடவுளன்பும் புதல்வர்க்கும் பிடிபட்டன. தந்தையார் ஒருமுறை தம் புதல்வரை இமாலயத்திற்கு உடனழைத்துச் சென்றார். தாகூருக்கு ஆற்றுக் காட்சியில் விருப்பம் உண்டு. தந்தையாராகிய மஹரிஷிக்கு மலைக் காட்சி இன்பம் அளிக்கும்.

௪. கவி மலர்ச்சி

மழை, இடி, இருட்டு, காலைக்கதிர், புயல், வெள்ளம், இவையெல்லாம் தாகூரின் காதில் கவி யிசைக்கும். சிறு வயதிலேயே தாகூர் கவி புனைவார். 25-2-1875-ல் தாகூரின் முதல் பாட்டு அமிர்தபஜாரில் வெளியானது. ஜோதீந்திரநாதர், தம்பியின் கவித் திறமையை வியந்தார்; "பாரதி" என்ற ஒரு சஞ்சிகை நடத்தி அதில் தாகூரின் இளங் கவிகளை வெளியிட்டார். அப்போது பாடிய இருபத்திரண்டு பாட்டுகள் இனிது கொண்டாடப்பெற்றன. மற்றும், "பிகாரி" (பிச்சைக்காரன்) என்ற கதை, "கருண" என்ற நாவல், சிறு கதைப் பாட்டுகள் பாரதியை அலங்கரித்தன. அப்போது தாகூரின் வயது பதினைந்து. "வனமலர்" (பன் பூல்) எனும் பாட்டு, நூலாக வெளிவந்து, ரஸிகர் மனத்தைக் கவர்ந்தது. இத்துடன் தாகூர் ராகராகிணிகளில் இனிய கீர்த்தனங்களும் பாடிக் கேட்போரைப் பரவசப்படுத்தினர்; வீட்டில் ஷெல்லி, ப்ரௌனிங் முதலிய கவிக

ளைக் கற்றார் ; கற்பது ஒரு பங்கு, சிந்திப்பது ஒன்பது பங்காயிருக்கும்.

ரு. ஐரோப்பிய சங்கீதப் பயிற்சி

20-9-1877-ல் தாகூர் முதன் முதல் கல்விக்காக சீமைக்குச் சென்றார் ; அங்கே லண்டன் கலாசாலையில் (Brighton University College, London) ஐரோப்பிய சங்கீதம் பயின்றார் ; சீமை வாழ்வு பிடிக்காமல் 1880-ல் தாய்நாட்டிற்குத் திரும்பினார் ; வந்ததும், ஆங்கில இலக்கியங்களைப் பற்றியும், ஷெல்லி, டென்னிஸன், ப்ரௌனிங், கெதே, தாந்தே, பெத்ரார்க் முதலிய புலவர் மணிகளைப் பற்றியும் பாரதியில் அரிய கட்டுரைகள் எழுதினார். அப்போது வெளிவந்த "பக்ன ஹ்ருதயம்" (ஒடிந்த மனது, Broken Heart) எனும் நாடகம் மிகவும் புகழ் பெற்றது. இந்நாடகம் பதினெட்டாம் வயதில் எழுதியது ; இன்னிசை நிறைந்தது. தாகூர் இசையமுத ஊற்று.

சா. நூன் மணிகள்

1881-முதல் 1913-வரை, தாகூர் கணக்கற்ற செய்யுட்களும், உரை நடை நூல்களும் இயற்றிக் குவித்தார். அவற்றில் முதன்மையானவை :—1. ஸந்த்யா கீத் (மாலைப்பாட்டு). 2. ப்ரபாத் கீத் (காலைப்பாட்டு). இதில்தான் "ஜனகணமன அதிநாயக ஜயஹே ! பாரத பாக்யவிதாத" என்னும் இனிய நாட்டுப் பாட்டு அடங்கியுள்ளது. 3. "விவிதப்ரஸங்க" (கட்டுரைகள்). 4. ராஜரிஷி; இது ஒரு நாவலும் நாடகமும் ஆம். 5. விஸர்ஜன் (Sacrifice). 6. மானஸி (Heart's

Desire). 7. மாயார் கேலா (மாயையின் விளையாட்டு); ஒரு இன்னிசை நாடகம். 8. நெய்வேத்ய (Offering). 9. நௌகா டுபி (படகு கவிழ்தல், Wreck). 10. சிசு (பாப்பாப் பாட்டுகள், Crescent Moon). 11. தேசிய கீதங்கள். 12. ஆத்ம சக்தி (அரசியல் கட்டுரைகள்). 13. காதற்பாட்டுகள். 14. கோரா (Gora). 15. கீதாஞ்ஜலிப்பாட்டுகள். 16. ராஜா (King of the Dark Chamber). 17. அசலாயதன். 18. சித்ரா (நாடகம்). 19. ஸாதனா. 20. மாலினி, நாடகம். 21. ஜீவன தேவதை. 22. ஊர்வசி. 23. கதா ஓ கஹினி—தமது குழந்தைகளுக்குச் சொன்ன இணையற்ற சரித்திரக் கதைகளும் சிறு கதைப் பாட்டுக்களும். 24. "கேயா", வண்ணங்கள். 25. 'ஸ்மரன்', மனைவி நினைவுப் பாக்கள் (In Memoriam). நவரஸப் பாட்டுகள், கதைகள், நாவல்கள், கற்பனைகள், கட்டுரைக் கொத்துக்கள், நாடகங்கள், கடிதங்கள் கணக்கற்றன! தொட்டவெல்லாம் அழகு, அமுதம், மதுரம், இன்பம்! இந்த இலக்கிய வெள்ளத்தின் விரிவு இச் சிறிய கட்டுரையில் அடங்காது. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் முதன்மையானவை :—1. My Reminiscences, இளமைக் குறிப்புகள். 2. The Gitanjali, பக்தி பரவசப் பாடல்கள் (நோபல் வெகுமதி பெற்றவை); கடவுளைச் சரணடைந்து, அவனின்பத்தில் சுதந்திரமாக வாழ அருள்வேண்டுதல். 3. The Gardener, கடவுட் காதல், இயற்கை யின்பம், ஆருயிர்ப்பணி முதலிய அரிய பொருளடங்கியது. 4. The Crescent Moon, குழந்தை மொழியிலும், விளை

யாட்டிலும் குலுங்கும் அழகும் சுவையும் அரிய உண்மைகளும் இதில் இனிது விளங்கும். 5. Chitra, உண்மைக் காதல், மணவாழ்வின் இன்பம், சித்திரை அர்ஜுனனைக் காதலித்த கதை, அரிய நாடகம். 6. The Post Office, இந்நாடகத்தில், அமல் என்னும் மாசற்ற சிறுவன், தன்முன் நடக்கும் மனித வாழ்வைக் கவனித்து, முடிவில் இறைவன் அருளை வேண்டுகிறான்; ஆண்டவன் செய்தியைப் பரப்பும் தபால்காரனாயிருக்க அவாவுகிறான். 7. Phalguni, இந்த வேதாந்த நாடகம், ஆத்மாவின் அமரத்தன்மை, சாகா வாழ்வு முதலிய தத்துவங்களை விளக்கும். 8. Tagore's Stories, வங்க நாட்டின், நடையுடை பாவனைகளைக் கொண்ட கற்பனைக் கதைகள். 9. Sadhana, பாரதிக்குப் பின், இப்பெயர்கொண்ட பத்திரிகை ஒன்று நடத்தினார். நமக்கு ஆங்கிலத்தில் கிடைத்துள்ள நூல், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் செய்யப்பட்ட சொற்பொழிவுகள். 10. Personality, கலை வளர்ச்சி, காதற் பெருமை; பெண்மையின் உரிமை பெருமைகளை இந்நூல் தெளிவுறுத்தும். 11. Nationalism, பொருளாதாரக் கொள்ளையின்றி, உள்ளொற்றுமை, கலைப்பெருக்கம், விரிந்த அன்பு பரந்த மனத்தால் நாட்டுப்பணி புரிய இந்நூல் வற்புறுத்தும். 12. Fruit-Gathering, வாழ்வுக் கனியை இறைவனுக்கு அர்ப்பணித்து, அவன் கலப்பில் வாழ அடங்காக் காதலை விளக்கும் உள்ளன்பு மாலைகள்; கீதாஞ்ஜலி போன்றன. 13. Stray Birds, வாழ்வையும் கலையழகையும் பற்றிய துக்கடாக்கள். 14. Lover's Gift and Crossing, வாழ்வு, காதல்,

சாவு, இவற்றைப்பற்றிய தத்துவங்கள். 15. Hungry Stones and other stories, மனித வியல்பையும், சமுதாயத்தையும் பற்றிய அரிய சிறு கதைகள். 16. Nishi and other stories, பெண்களுக்குக் காதலால் எய்தும் நலமும், ஆண்களுக்கு நல்விருப்பங்களால் வரும் பெருமையும் விளக்கும் சிறு கதைகள். 17. Sacrifice and other Plays, பொதுநலம், சமூக சுதந்தரம், அருட்பணி முதலியவற்றின் அவசியத்தை விளக்குவது. 18. Cycle of Spring, வாழ்வின்பத்தை விளக்குவது. 19. Gora, வங்க மொழியில் மிகச் சிறந்த நாவல்; இந்திய விடுதலைப் போரில் அனுதையாக விடுக்கப்பட்ட ஒரு ஆங்கிலச் சிறுவன் வங்காளியால் வளர்க்கப்படுகிறுன்; வயது வந்ததும் ஆங்கிலேயரை வெறுக்கிறுன்; முடிவில் தானே ஆங்கிலேயன் என்று அறிகிறுன்; இந்நூல் ஓர் அரிய கற்பனை. 20. Wreck, இதுவும் ஒரு அரிய நவீனம்; சீர்திருத்தக் கதை; இந்து குடும்பங்களுக்கு உலகளாவிய பரந்த நோக்கம் வேண்டும் என்று வற்புறுத்துவது.

எ. வாழ்வாறு

இனித் தாகூரின் வாழ்வாற்றைப் பின்பற்றுவோம். தாகூர் 9-12-1883ல் மிருணுளினி தேவியைக் காதலித்து மணந்தார். இம்மாது கணவனிடம் பேரன்பு பூண்டாள். ஆனுல் 23-11-1902-ல் விதியின் கொடுமை இக்காதலரைப் பிரித்தது. மிருணுளினி உலக வாழ்வினின்று விடை பெற்றுக்கொண்டாள். தாகூரின்

துயரத்தை, "ஸ்மரண்" என்னும் கவிதையில் காண்கிறோம்; Fruit-Gathering என்ற நூலிலும் காண்கிறோம்; மனந் தாளாமல், கவிஞர், இமாலயம் சென்று அல்மோராவில் வசித்தார்; தம் குழந்தைகளைத் தாமே பாதுகாக்க நேர்ந்தது. இரண்டு குழந்தைகள் இறந்தன. தாகூரின் வாழ்வு உள்முகப் பட்டுப் பெரிய மாறுதல் அடைந்தது. சாவின் துயர் அவரைப் புதிய மனிதனாக்கியது.

1881-ம் ஆண்டு, தந்தையார், தாகூரைப் பாரட்லா படிக்கச் சீமைக்குப் பயணம் பண்ணி யனுப்பினர். பிள்ளைக்கும், பள்ளிப் படிப்பிற்கும் பொருத்தமில்லை. அதிலும் சீமை வாழ்வு சுத்தமாகப் பிடிக்கவில்லை. தாகூர் சென்னைக்கு வந்து, மேலே செல்ல மனமில்லாமல் கல்கத்தாவிற்குத் திரும்பினர். அவர் பாரத சக்தியின் பாலூற்று. உலகெல்லாம் அதைப் பருகக் காத்துக் கொண்டிருக்கிறது. மேனாட்டுக் கலைகள் அந்த அமர நதியின் சிற்றாறே. தாகூர், தம்முட் கற்று, தம்முட் பழுத்த வரகவிஞர். தாகூரின் கவித்திறமை இதற்குள் பலருக்கும் தெரிந்தது. வங்கீய ஸாஹித்ய சபைக்குத் தாகூர் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் மூலம் நமது கவிஞர் அரிய இலக்கியப் பணிகள் புரிந்தார். பாரதி, ஸாதனா, சைதலி என்னும் மூன்று பத்திரிகைகள் மூலம் தாகூர் கவிவாணி அரிய இலக்கியத் தொண்டு புரிந்தது. வயதான தந்தையார் தமது ஜமீன் நிர்வாகத்தைத் தாகூரிடம் கொடுத்தார். அப்போதே ஸாந்திநிகேதனம் கவிஞருள்ளத்தில் உருவானது. இத்துடன் பிரம சமாஜப் பொறுப்பும் வந்தது. 22-12-1901-ல் தாகூர் பிரம வித்யாலயம்

ஒன்று அமைத்துத் தெய்வப் பணி புரிந்தார். இவ்வாறு இலக்கியம், சமயம் ஆகிய இரண்டிற்கும் தொண்டு செய்யும்போது, பாரத தேவியின் அழைப்பு வந்தது.

அ. தாகூரின் நாட்டன்பு

தாகூரின் நாட்டன்பு எல்லையற்றது. அவர் மனம் போலவே தாயன்பும் பரந்து விரிந்தது. குறுகிய நினைப்புகள், தனதே பெரிதென்று பிறர் நாட்டைச் சிறுமை செய்தல், தன்னலம், பேராசை—இவை அந்த அன்பு விரிவில் இல்லை.

"Our mission is to show that we have a place in the heart of the great world." ("பேருலகின் உள்ளத்தில் நமக்கு ஒரு இடம் உண்டு என்று விளக்குவதே நமது அரும் பணி.")

"So I stood by my country one morn
 And prayed with folded hands;
Accept, Mother, all my love
 This I consecrate to Thee."

"ஆதலின், ஒரு காலை, எனது நாட்டின் துணையாக நின்று, கைகட்டி வணங்கினேன் :—'தாயே, எனது அன்பு முழுதும் ஏற்றுக்கொள்; இதை உனக்கே நிவேதிக்கிறேன்' என்று தமது தேசபக்தியை வெளியிடுகிறார் தாகூர். 1901-முதல் பாரத நாட்டிற்குப் புது விழிப்பும், புத்துணர்வும் அளித்த இயக்கங்களிலெல்லாம் அவரது கலப்பு இல்லாமல் இராது. அதிலும் புதிய வங்காளத்தின் நபிநாயகம் தாகூர்

வாணியே என்று துணிந்து கூறலாம். தாகூர் என்ருல் வங்காளி கையெடுத்துக் கும்பிடுவான்—அவர் செய்த அருங்கலைப் பணி அவ்வாறு நாட்டின் இரத்தத்தில் ஊறிப்போயிருக்கிறது.

௧. தாய்மொழிப் பற்று

சீமைக்குச் சென்று ஆங்கிலம் படித்தவனே மனிதன் என்று செருக்காடிய மாயத்தைத் தாகூர் ஒழித்தார். அக்காலம் ஆங்கிலங் கலந்தே வாலிபர் பேசிக்கொண்டிருந்தனர். தாகூர் சுத்தமான வங்காளமே பேசுவார்; பிறரையும் பேசச் சொல்லுவார்; பிறருக்கும் தமது தாய்மொழிகளை உயிர் போலப் போற்றச் சொல்லுவார். ஐம்பது வயதிற்குப் பிறகுதான் தாகூர் ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினர்; 1911-ல் தான் முதன் முதல் தமது பாட்டொன்றை மொழி பெயர்த்தார். அதை மாடேண் ரிவ்யூ ஆசிரியர் ராமானந்த சடர்ஜி வெளியிட்டார். இன்றும் தாகூர் பெரும்பாலும் வங்காளத்திலேயே பேசுகிருர்; எழுதுகிருர். அவர் வங்க வாக்கை ஐரோப்பியரும் மெச்சுகின்றனர். நோபல் வெகுமதி கிடைத்த பிறகுதான் தாகூர் பிறநாடுகளில் ஆங்கிலச் சொற்பொழிவுகள் நிகழ்த்தத் தொடங்கினர். தாகூரின் தாய்மொழிப் பற்றுத் தமிழன் இரத்தத்தில் ஊறிப்போக வேண்டும். இவ்வாண்டு (1937) நடந்த கல்கத்தா சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவிற்குத் தாகூர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ருர். இது முதல் தடவை ஒரு

இந்துவிற்கு அளிக்கும் கௌரவம். இதுகாறும் அக்கிராசனம் வகித்தவர் ஆங்கிலத்திலேயே சொற் பொழிந்தனர். நமது வரகவிஞர் தமது தாய்மொழி யாகிய வங்காளத்திலேயே பேசினர்; நமது சொந்த நா, பல், குடல்களைக் கொண்டே உணவைச் சீரணிப் பது போல, தாய்மொழியைக் கொண்டே எல்லா அறிவும் வளர்க்கவேண்டும் என்று வற்புறுத்தினர். இஃதோர் அரிய உதாரணம்!

கo. சுதேசப் பணி

சுதேசி இயக்கத்தின்போது தாகூர் செய்த நாட்டுப் பணி மிகப் பெரிது. அவர் வங்க தர்சனம் என்ற பத்திரிகை மூலம் உணர்ச்சி ததும்பும் கட்டுரை களை வெளியிட்டார்; சிவாஜி திருநாள் நடத்தி ஞர்; சீக்கிய, மராத்திய வீரர் பேரில் உள்ளத்தை உருக்கும் வீரத் திருப்புகழ் இசைத்தார். இரவீந் திரநாதரின் ராஷ்ட்ர கீதங்கள் இளம் வங்காளி களுக்குத் தேசாவேசக் கனலளித்தன. கர்ஸான் வங் காளப் பிரிவினையை உறுதியாக்கின நாளன்று வங்க சமுதாயம் முழுவதும், "வந்தேமாதரம்!" என்று ஆர்த்தெழுந்தது. வீர இளைஞர்கள் தம்முயிரை நாட்டிற்கே பலிதானமாக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு, கங்கைக் கரையில் சபதம் செய்தனர். அவர்களில் இரவீந்தரும் முன்னணியில் நின்று ரக்ஷா பந்தனம் செய்துகொண்டார்; துர்கா பூஜை யன்று சுதேசித் திருவிழாக் கொண்டாடினர். "இன்று நினைப்பில் வைத்துக்கொள்வோம்; இன்று நமது நாட்டுணர்ச்சி கொழுந்தேறுகிறது; இந்த நாள்

நமக்கு ஒரு சக்தி உதித்துள்ளது. நமது உருக்கமான முறையீடுகளை இங்கிலாந்து கேட்டாலும் சரி, கேட்காவிட்டாலும் சரி, நாமிருக்கும் நாடு நமதே என்றறிவோம். அது நமது தந்தையர் நாடு; நமது குழந்தைகளுக்கு உரிய நாடு அது நமக்கு உயிர், ஆற்றல், நலமெல்லாம் அருளும் அன்னை" என்று இரவீந்திரர் அன்று முழக்கினர்; வங்கத்தில் தேசீய கலாசாலை ஏற்படுத்த அறிவாளிகளுடன் கலந்து உழைத்தார். "ஜன சமுதாயத்தின் மனத்தை நடத்தும் முதல்வனே, தலைவனே, பாரத செல்வத்தின் கடவுளே, உனது சுப நாமம் நாடெங்கும் விழித்தெழட்டும். எங்கும் உனது வெற்றி எதிரொலிக்கட்டும். உனது உதார வாணியைக் கேட்டு, ஹிந்து, புத்தர், சீக்கியர், ஜைனர், பாரசிகர், இஸ்லாமியர், கிறிஸ்தவர், மேனாட்டார், கிழக்கு நாட்டாரெல்லாம் உன் அரியணை முன் கூடி அன்பிசைக்கட்டும். ஜன சமூகத்தை ஒற்றுமைப்படுத்தும் கடவுளே, வெற்றி! வெற்றி! துயர்களை ஒழிப்பவனே, எம்மை இடர்களினின்று காப்பாற்று. இருளை விலக்கு, அச்சத்தை ஒழி. நவஜீவன ரசத்தைப்பொழி. ராஜேஸ்வரா, வெற்றி!" என்று கவிஞர் முழக்கிய மங்கள கீதம் இன்றும் பாரத மக்கள் உள்ளத்தில் எதிரொலிக்கிறது. தாகூரின் நாட்டன்பில் குறுகிய நோக்கங்கள் கிடையா. உலக சமரசம், சர்வ ஜன ஒற்றுமை, பரந்த அன்பு, அறிவு, கலை விளக்கம், வாழ்வில் அழகு, இவையே தாகூரின் கொள்கைகள். அரசியல் வாதிகளின் பொறுமைகளும், புகைச்சல்களும், சண்டைகளும், தூற்றல்களும் அவருக்குப்

பிடிக்கவில்லை. அக்காலம் சில வாலிபர்களின் புரட்சிக் கனவுகளை அவர் கண்டித்தார்; ஒளிந்து மறைந்து வஞ்சகமாக வெடி குண்டு போட்டு, விடுதலை பெறும் பலாத்காரங்களை அவர் பலமாக மறுத்தார்; பாரத நாட்டிற்கு ஆத்ம பலத்தாலும் கலை விரிவாலுமே எல்லா நலமும் கிடைக்கும் என்று அப்போதே உபதேசித்தார். மஹாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் செய்த ஸத்யாக்ரஹம் அவருக்குப் பிடித்திருந்தது. காந்தி யடிகளை அவரே மஹாத்மா என்று அழைத்தவர்; மஹாத்மாவிற்குத் துணை செய்ய ஸி. எஃப். ஆண்ட்ரூஸை அனுப்பினர். தென்னாப்பிரிக்கா இந்தியருக்குப் பரிந்து பேச காந்தி யடிகள் லண்டனுக்குச் சென்றார்; தென்னாப்பிரிக்காவில் அப்போது தாம் நடத்திய ஃபோனிக்ஸ் ஆசிரம மாணவரைச் சாந்திநிகேதனில் தாகூரின் காப்பில் விடுத்தார். காந்தி யடிகளும் சாந்திநிகேதனில் கவியரசருடன் பலதடவை தங்கியிருக்கிறார். இருவருக்கும் உள் ஒற்றுமை மிகுதி. ஒரு முறை விஸ்வபாரதிக்காகப் பணந் திரட்ட நாடகக் குழுவுடன் தில்லிக்கு வந்தார் தாகூர். இதைக் கேள்வியுற்ற மஹாத்மா ரூ. 65,000 வசூலித்துக் கவியரசருக்களித்தார். கதர் விஷயத்தில் தான் தாகூர் வேறுபடுகிறார். அஹிம்ஸை, ஸத்யாக்ரஹம், தீண்டாமை விலக்கு, கிராம நிர்மாண வேலை முதலிய கொள்கைகளில் அவருக்கு மெத்த பிடித்தம் உண்டு. பெஸண்டம்மையாரைச் சிறையிலிட்டபோது தாகூர் அதிகார வர்க்கத்தின் செயலைக் கண்டித்தார்; "என்ன வந்தாலும் சரி; நாம் சுயாட்சி பெற்றே தீரவேண்டும்; இதுவே எல்லாக் குறைகளுக்கும் மருந்து" என்று

1917-ல் ஒரு கூட்டத்தில் பேசினர். பெஸண்டம்மை தலைமை வகித்த கல்கத்தா காங்கிரஸுக்கு (பாரத சபை) வரவேற்புத் தலைவராய் இருக்கத் தாகூர் வற்புறுத்தப்பட்டார். ஆனல், தாகூர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை; ஒரு உருக்கமான பாட்டு மட்டும் பாடினர்; பஞ்சாப் படு கொலையைக் கேட்டதும், திகைத்து, வருந்தி, சர்க்கார் கொடுத்த வீரப் பட்டத்தை (Knighthood) வாபீஸ் செய்து விட்டார்; ஜலியன்வாலாப் படு கொலையைப் பல வாறு கண்டித்தார்; அதற்காகப் பம்பாயில் கூடிய கூட்டத்திற்கு ஆந்துரூஸ் மூலம் தமது உணர்ச்சிகளை எழுதி யனுப்பினர். டயர் விசாரணையின்போது தாகூர் லண்டனில் இருந்தார்; அப்போது பல பத்திரிகைகளுக்குப் பேட்டி யளித்து, பஞ்சாப் விஷயமாகவும், இந்தியாவைப் பற்றியும் தமது எண்ணங்களைத் தெரிவித்தார். அவற்றின் சுருக்கமாவது :—

"சகோதரர்களே, மிருக பலம் மனிதத் தன்மையை நசுக்கும்போதுதான் ஆன்மா வெல்லொணதது என்று உறுதியாக்கும் சமயம் வருகிறது. நாம் அஞ்சோம்; ஆனல் பழிக்குப் பழி வாங்கவும் கருதோம். தம்மை வென்று, பொறுமையை உபதேசித்து, அன்பைப் பரப்பிய புத்தரின் திருவுருவை நமக்குத் தந்த முன்னேர்களுக்கு நன்றி செலுத்துவோம்; பிறரைச் சார்வதால் நமக்கு மோட்சமில்லை; நமக்குள் உள்ள குறைகளை நீக்க வேண்டும்; நமது கல்வி, பொருளாதாரம், சமுதாய வாழ்வை ஒழுங்கு முறையாக அமைக்கவேண்டும். தியாகத்திற்குத் தயாராயிருங்கள்; பொது நலத்திற்காக இடர்களைப்

பொறுங்கள். இந்தச் சம்பவத்தால் ஒரு விழிப்பு ஏற்பட்டுள்ளது. இது, நாட்டில் சுயமரியாதை, பொருளாதார முன்னேற்றம், அத்யாத்ம சுதந்திரம் ஆகிய இவற்றிற்கு அடிப்படையாகும் என்பதுறுதி. சினமும், பழிவாங்கும் நினைப்பும் வீண்; கெஞ்சிக் கூத்தாடலும் வேண்டா. அச்சமின்றி நிலையான பணி புரிவோம். அதுவே பெருமை பெறும் வழி."

மாங்தேகு சீர்திருத்தத்தைப் பற்றி மக்கள் தாகூரைக் கேட்டனர். அதற்கு அவர், "அதில் எனக்கு அக்கறையில்லை; அதனால் விடுதலை யில்லை. எனது காலத்தை நிலையான பணியில் செலவிட விரும்புகிறேன். அரசியலைவிடச் செய்யவேண்டிய அரிய பணிகள் உள்ளன. அவற்றிலேயே நான் கவனம் செலுத்துவேன்" என்றார். ஆம், யார் யாருக்கு எது எதுவோ அது அவரவர்க்குத் தகுதி. குயிலுக்கொரு வேலை—கோழிக்கொரு வேலை. காவியச் சோலையில் கூவும் குயிலைக் கோழிச் சண்டைக்குப் பழக்கலாமா? தாகூர் போன்ற வரகவி, அரசியல் போராட்டத்தில் தன் காலத்தைக் கழிப்பது அருங்கலை வளர்ச்சிக்கு நஷ்டமாகும். சாந்திநிகேதனில் அவர் செய்துள்ள பெரும் பணியே ஒரு அற்புதம். கல்வி, கலை, கவிதை, சித்திரம், தொழில், பத்திரிகை, பொருளாதாரம், சீர்திருத்தம், உரிமைப் போராட்டம் முதலிய எத்தனையோ வேலைகள் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டும். யார் யார் எதெதில் திறமைகொண்டவர்களோ அவரவர் அதிலேயே ஈடுபட்டால் எடுத்த காரியம் பூரணமாக நிறைவேறும். தாகூரின் பணி மிகப் பெரிது:—

"Where the mind is without fear
and the head is held high;
Where knowledge is free;
Where the world has not been broken up
into fragments by narrow domestic walls;
Where words come from the depth
of truth;
Where tireless striving stretches its arms
towards perfection;
Where the clear stream of reason has
not lost its way into the dreary desert
sand of dead habit;
Where the mind is led forward by Thee
into ever widening thought and action—
Into that heaven of freedom, my Father,
let my country awake."

"மனம் எங்கு அஞ்சாதோ; எங்குக் கம்பீரமாகத் தலைநிமிர்க்கப்படுமோ; அறிவு எங்குச் சுதந்தரமாயுளதோ; எங்கு உலகம் குறுகிய குல கோத்திரச் சுவர்களால் துண்டு துண்டாகப் பிளக்கப்பட்டிலதோ; எங்கே வாய்மையின் ஆழத்தினின்று வார்த்தைகள் வருமோ; எங்கே சளைக்கா வுழைப்பு பரிபூரணத்தின்பால் தனது கைகளைப் பரப்புமோ; எங்குப் பகுத்தறிவென்னும் தெள்ளாறு வழிதப்பிச் செத்த பழக்க வழக்கமென்னும் வரண்ட வனாந்தர மண்ணில் புகாதோ; எங்கு மனம் உன்னால் முன்னே நடத்தப்படுமோ; அந்தச் சுதந்திர விண்ணில், என்னப்பனே, எனது நாடு விழிக்க வருள்."

இதுவே தாகூரின் திருவுள்ளம். இதன் அலங்கார விரிவே மற்ற வாக்குகளெல்லாம். இதை நிறைவேற்றவே விஸ்வ பாரதி ஏற்பட்டது.

கக. நோபல் வெகுமதி

தாகூரின் புகழ், பூமெத்தை மேல் நடக்கவில்லை. இலக்கிய உலகில் அவர் மிகவும் இடர்ப்பட்டார். அவர் பண்டிதரல்லர்; இயற்கைக்கவிஞர்; மேனாட்டு இசை நுட்பத்தை வங்கக் கவிதையில் இணைத்தார். பதங்கள் மிக எளிய; பொருள் புதிது; ஆழமானது. மாமூல் இலக்கணப் புலவர்கள், 'இப்படியும் கவிபாடலாமா,' என்று கூப்பாடு போட்டனர். பண்டிதர்கள் மதுஸூதனதத்தரின் மேகநாத காவியத்தையே மிகச் சிறந்ததாகக் கொண்டாடினர். பண்டிதர்களுக்குத் தாகூர் கவி பிடிக்கவில்லை—அதிலும் கீதாஞ்ஜலியில் அவர்களுக்கு மிக்க வெறுப்புண்டு. தாகூர், இளமையில் தமக்கு ஆசிரியராயிருந்த ஒருவரிடம் கீதாஞ்சலியைக் காண்பித்தார்; "பாலோநய்" (நன்றாயில்லை) என்று விட்டார் அவர். பண்டிதர்களுக்கும் வரகவிஞருக்கும் நெடு நாள் மனக்கசப்பு இருந்தது. அத்தகைய கீதாஞ்ஜலிதான் நோபல் வெகுமதி, 8000 பவுன் (ரூ. 1,20,000) பெற்றது. W. B. Yeats (ஈத்ஸ்) என்னும் ஆங்கிலப் புலவர் மணி இவ்வரிய நூலின் மொழி பெயர்ப்பைப் படித்துப் பரவசப்பட்டார். 1912-ல் இந்நூல் இங்கிலாந்தில் வெளியானதும், கலையுலகில் ஒரு புது யுகமே தோன்றியது. இந்நூலைப் பற்றி முகவுரையில் ஈத்ஸ் கூறுகிறார்:—

"இரவீந்திரநாதர் கவிதையில் ஒரு வரி வாசித்தால் உலகத் துயரெல்லாம் பறந்து போகின்றன. கவியிலும் இசை யின்பத்திலும் அவருக்கு இணையில்லை." தாகூர் நோபல் வெகுமதி பெற்ற அன்றே பாரத தேசம் உலகின் மதிப்பில் உயர்ந்தது. அது முதல், தாகூரின் நூல்கள் பல, மொழி பெயர்க்கப்பட்டு, உலகெங்கும் பரவின. எல்லா நாடுகளும் கவியரசரை வரவழைத்துப் போற்றிப் புகழ்ந்தன. சாந்திநிகேதனில் வெற்றித் திருவிழா நடந்தது. கல்கத்தா சர்வகலாசாலை தாகூருக்கு டாக்டர் பட்டம் (D. Litt.) அளித்தது. அரசாங்கம் அவருக்கு வீரப்பட்டம் (Knight) ஈந்தது. நார்வே, ஸ்வீடன், இங்கிலாந்து, பிரான்ஸ், உலாந்தா, ஸ்வித்ஸர்லந்து, ஆஸ்த்ரியா, ஜெர்மனி, ருஷ்யா, இதாலி, அமெரிக்கா, கீழிந்தியத் தீவுகள், மலேயா, சையாம், சைனு, ஜப்பான் முதலிய நாடுகளெல்லாம் பாரத தேவி பெற்ற வரகவிஞரை வரவேற்று நன்கு மதித்து வெகுமதியளித்தன. 1919-ம் ஆண்டும், சென்ற ஆண்டும் தாகூர் நமது தமிழ் நாட்டிற்கு எழுந்தருளினர். 1919-ல் மதுரை அமெரிகன் காலேஜில் வனவாசகம் (Message from the forest) என்ற கட்டுரை படிக்கும்போதே தாகூரை நான் நேரில் கேட்டின்புற்றேன். அப்போது அவர் டாக்டர் கணபதிராய் வீட்டில் தங்கினர். அவருடைய குரலோ யாழினும் இனிது. கீதாஞ்சலிப் பாட்டும் ஒன்று பாடக் கேட்டுள்ளேன். இன்னும் அவர் இன்குரல் என் காதில் சுழன்றொலிக்கிறது. இதுகாறும் சுமார் 11 தடவை அவர் கடல் கடந்து, பிற நாடுகளுக்குச் சென்று, திக்விஜயம் செய்

துள்ளார்; ஜப்பான், சீனம், ருஷ்யா முதலிய நாடுகளில் தமது அனுபவத்தைப் பற்றி அரிய கடிதங்கள் எழுதி, மாடேண் ரிவ்யூவில் வெளியிட்டுள்ளார். தாகூரின் 70-ம் ஆண்டு வெகு உற்சாகமாக வங்காளத்தில் கொண்டாடப்பெற்றது. தாகூரின் அரிய நண்பரும், அவரது அமுத வாக்குகளைக் கருத்துடன் தமது ப்ரபாஸி, மாடேண் ரிவ்யூவில் வெளியிட்டு உலகிற்குத் தரும் அரும்பணி பூண்டவருமான ராமானந்த சடர்ஜியின் முயற்சியால் 1931-ம் ஆண்டு, மே மாதம், தாகூரின் தங்க நூல் (Golden Book of Tagore) வெளியிடப் பெற்றது. அதில் உலகிலுள்ள பேரறிவாளிகளும் கவிகளும் தாகூரைப் புகழ்ந்துள்ளனர். அதன் விலை ரூ. 15. இரவீந்திர சகாப்தம் நடக்கிறது. தனது தாய்மொழிக் கவியை வங்கம் அவ்வாறு பெருமைப்படுத்துகிறது.

க௨. விஸ்வ பாரதி

கவிதையைப்போலவே தாகூர் அமைத்த கல்வி நிலயமும் உலகப் புகழ் பெற்றது. அதை நிலைநிறுத்த அவர் வெகுபாடுபட்டார். தொடக்கத்தில் பணமுடை உண்டு. அவர் தம் மனைவியின் நகை, நாணயங்களைக்கூட விற்று இந்நிலயத்தை வளர்த்தார்; நோபல் வெகுமதி முழுதும் அதிலேயே போட்டுள்ளார்; சுற்றுப் பிரயாணங்களில் கிடைக்கும் வெகுமானங்களெல்லாம் அதன் முன்னேற்றத்திற்கே அர்ப்பணித்துள்ளார். விஸ்வ பாரதி ஒரு கலை யுலகு. மேனுட்டிலும் கிழக்கு நாட்டிலுமுள்ள அருங்கலைச் செல்வமெல்லாம் அதை அணிசெய்கின்றன (தமிழைத் தவிர).

"யத்ர விஸ்வம் பவதி ஏகநீடம்"

"எங்கு உலகம் ஒரு கூட்டில் சேருகிறதோ" என்பது விஸ்வபாரதியின் சுருதி வாக்கியம். ஒரு தாய் பெற்ற குஞ்சுகளெல்லாம் ஒரு கூட்டில் கூடி இன்பமாக வாழ்வது போல, உலகெலாம் ஒன்றுபட்டு வாழும் சாந்த நிலயம் என்பது பொருள். தாகூர் பிரம சமாஜத் தலைவர்; இறைவனை உள்ளத்திற் கொண்டு, அழகும் அணியும் அருங்கலை யின்பமும் பொலிய உலக வாழ்வு வாழ்வதில் நம்பிக்கை யுள்ளவர். "பைராக்கிய ஸாதனே முக்திஸே ஆமார் நய்," "உலகை வெறுத்துத் துறக்கும் முக்தி சாதனம் எனது கொள்கை யன்று" என்கிறார்.

"ஈசா வாஸ்ய மிதம் ஸர்வம்
யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்
தேன த்யக் தேன புஞ்ஜீதா
மாக்ருத: கஸ்ய ஸ்வித்தனம்"

என்னும் உபநிஷத் வாக்கே தாகூரின் கொள்கை. மஹாத்மா, அரவிந்தர் முதலிய மஹான்களின் உள்ளத்தை அள்ளியது இந்த ரிஷி வாக்கே. உலகமெல்லாம் இறைவன் உறையுள். அந்த உணர்வால் மனத்துறவுடன் உலகை அனுபவி; பிறர் பொருளுக்குப் பேராசைப்படாதே என்பது கருத்து. சாதி, சமயம், நிறம், சாத்திரம், கோத்திரம், மொழி, நாடு என்னும் வேற்றுமை சிறிதுமின்றிச் சாந்திநிகேதனில் நல்லறிஞர் வாழுகின்றனர். மாணவ மாணவிகள் விகற்பமின்றிச் சேர்ந்து கற்கின்றனர். அங்கே மூலாதாரக் கல்வி, உயர்தரக் கல்வி, கல்லூரிக் கல்விச்

சாலைகள் உள்ளன; பல கலை ஆராய்ச்சிகள் நடக்கின்றன; காவியம், ஓவியம், பாட்டு, கைத்தொழில்கள், வேளாண்மை, கிராம நன்மைக்கான வேலைகள் நடக்கின்றன; ஐக்கிய நாணய சங்கமும், சுகாதார நிலயமும் உள்ளன; நல்ல தேகப் பயிற்சி தரப்படுகிறது. ஜூஜித்ஸூ (Juijitsu) என்னும் தற்காப்புப் பயிற்சி, ஜப்பானிய பலவான் ஒருவனால் தரப்படுகிறது.

சாந்திநிகேதனைச் சேர்ந்த ஸ்ரீநிகேதனில் கிராமப் பணிகள் நடக்கின்றன. அழகும், எளிமையும், அறிவும், சுயேச்சையும், தூய்மையும், ஒற்றுமையும் விஸ்வ பாரதியில் கூடி வாழ்கின்றன. இது வரகவிஞரின் வரம் பெற்ற கலா நிலயம். வரகவிஞர் வாழ்க. விஸ்வ பாரதி வாழ்க. இனி, தாகூரின் அமுத வாக்கில் சில சொட்டுக்கள் பருகுவாம்.

கரு. தாகூர் வாணி

1. இறைவ, நின்னைப் பாடவே இங்கிருக்கிறேன். நினது உலக சபையில் எனக்கொரு சிறு மூலை கிடைத்துள்ளது.

2. உள்ளத்தானே, என் உள்ளத்தை மலர்ப்பி; என்னை நிர்மலமாக்கு; உஜ்வலப்படுத்து ; அழகுசெய் ; என்னை விழிப்புறுத்து ; ஊக்கு ; அச்சமறச் செய் ; மங்களமாக்கு ; ஐயமறச் செய்:

“அந்தர மம விகஸித கர அந்தர தரஹே
நிர்மலகர உஜ்வல கர ஸூந்தர கரஹே!
ஜாக்ரத கர உத்யத கர நிர்பய கரஹே!
மங்கல கர, நிரவஸநிஸ் ஸம்சய கரஹே.”

[தாகூரின் வங்க நடைக்கு ஒரு உதாரணமாக இந்த நான்கு வரிகளைக் குறித்தோம்.]

3. உயிர்க்குயிரே, நினது ஸ்பர்சம் என் அங்கங்களில் உள்ளது; உணர்கிறேன்; எப்போதும் எனதுடலை மாசறக் காக்க முயலுவேன். எனது மூளையில் அறிவொளியைத் தூண்டும் உண்மை நீ யென்றறிவேன்; என் எண்ணங்களினின்று பொய்யை விலக்க முயலுவேன். இறைவ, என்னுள்ளத்துள் கோயில் கொண்டுள்ளாய்; அறிவேன்; என் இதயத்தினின்று தீமைகளை ஒட்டி அன்பை மலரச் செய்வேன். நின் சக்தியே எனக்கு வினைத் திறன் அளிப்பது; அறிவேன். என் செயல்களில் நின்னை விளக்குவதே என் முயற்சி யாகுக.

4. இறைவ, இம்மலரைப்பறி; தாமதியாதே; இது வாடி மண்ணில் விழுமென்று அஞ்சுகிறேன். உன் மாலையில் இதற்கு இடமில்லாவிடினும் சுருக்கென்று உன் கையால் கிள்ளும் வெகுமதிப்பைத் தா.

5. எனது கவிமகள் அணி மணிகளைக் கழற்றி விட்டாள். ஆடையாபரணங்களில் அவள் பெருமை கொள்ளவில்லை. நகைகள் நமது கூடலைக் கெடுக்கும்; அவை நினக்கும் எனக்கும் குறுக்கே நிற்கும். அவற்றின் சலசலப்பு நினது இரகசியப் பேச்சை அடக்கிவிடும்.

6. நின்னைக் கண்டதும் என் கவிச்செருக்கு வெட்கி யொழிந்தது. ஏ கவியரசே, உன் மலரடியில் அமர்ந்தேன். நின் இசை நிரப்ப, என் வாழ்வைப் பூங்குழல் போல எளிமையாக்கவும் நேர்மையாக்கவும் அருள்.

7. அரச வுடைகளால் அழகு செய்து, கழுத்தில் தங்கச் சங்கிலிகள் குலுங்கும் குழந்தை, விளையாட்டில் எல்லா இன்பத்தையும் இழக்கிறது. தன் அணியே அடிக்கடி தனக்குத் தடையாகிறது.

8. மந்திரம், தோத்திரம், ஜபம் எல்லாம் விடு. கோயிலின் இந்தத் தனியிருள் மூலையில், கதவுகளையெல்லாம் மூடிக்கொண்டு யாரை வழிபடுகிறாய்? கண்ணைத் திற; பார். உன் கடவுள் உன் முன் இல்லை.

அதோ பார். விவசாயி கடினமான நிலத்தை உழுகிறான்; ரஸ்தா போடும் கூலி கல்லுடைக்கிறான். அவர்களுடன் வெயிலிலும் மழையிலும் இருக்கிறான் அவன் (கடவுள்). அவன் ஆடை புழுதியேறியுள்ளது. காஷாயத்தை அவிழ்த்து வை. அவனைப் போல மண்ணில் வந்து பாடு படு.

முக்தி? எங்கே முக்தி? நமது இறைவனே சிருஷ்டி பந்தங்களை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டுள்ளான்; நம்முடன் என்றும் பிரியாது அவன் கட்டுப்பட்டுள்ளான். நிஷ்டைகளை விட்டு வா. பூவும் புகையும் அப்படித்தானே வை. உன் ஆடைகள் கிழிந்தாலென்ன? அழுக்கேறினாலென்ன? அவனை (இறைவனை) எதிர் கொள்; நெற்றி வேர்க்க அவனோடு உழை.

9. "கைதியே, சொல்; இந்தத் தளரா விலங்கைச் செய்ததார்?"

கைதி:—"நானே இதை வெகு கருத்துடன் செய்தேன். எனது வெல்லொணா ஆற்றல் உலகை எனக்கு அடிமையாக்கி, அசைக்கமுடியாத சுயேச்சை தருமென நினைத்தேன். அதற்காக, இரவும் பகலும்

பெரிய உலை மூட்டி, கொடிய, கடிய சம்மட்டிப் பூசைகளால் இச் சங்கிலியைச் செய்தேன். கோவைகள் கழலாது நன்றாக இணைந்து சங்கிலி முடிந்ததும், எனக்கே அது விலங்காகக் கண்டேன்.

10. நின் இச்சைக்குக் கட்டுப்பட்டு, நின் எண்ணம் என் வாழ்வில் நிறைவேற எவ்வளவு போதுமோ அவ்வளவு கட்டுகளே எனக்கிருக்கட்டும்—நின் அன்பின் தளை போதும்.

11. என் வேண்டுகோள் இதுவே:—இறைவனே, என் மன வறுமையைத் தூரோட அறுத்துத் தள்ளு. இன்ப துன்பங்களை எளிதாகத் தாங்கும் உறுதி தா. என் அன்பு தொண்டில் பயனுகும் வழி வருள். ஏழைகளை மறுக்காமலும், கொடுமை செய்யும் வலியர் முன் தாள் பணியாமலும் இருக்கும் திண்மையருள். அற்ப விவகாரங்களினின்று என் மனத்தை உயர்த்த வைராக்கியம் அருள். எனது ஆற்றலை அன்புடன் உனக்கே அடைக்கலமாக்கத் திறமையருள்.

12. நான் வேண்டுவது நீயே, நீயே—இதை என் உள்ளம் ஓயாது சொல்லுக. இரவும் பகலும் என்னைக் கலைத்திழுக்கும் ஆசைகளெல்லாம் பொய்; அடி மட்டும் வெறுமை.

13. புண்ணியனே, விழித்திருப்பவனே, மண்ணும் மாயையாலும் என் மனத்தை ஆசை கட்டும் போது, ஒளியும் இடியும் கொண்டுவா.

14. உன் மனம் தளர்கிறது; கண்கள் அயர்கின்றன. ஏன்? முட்களுக்கிடையே மலர் பொலிந்தோங்கும் செய்தி உனக்குத் தெரியாதா? விழி, ஓ! விழிப்பூட்டு. காலம் வீண் வேண்டா.

15. துறவறத்தில் என் முக்தி யில்லை. ஆயிரம் இன்பத் தளைகளால் என்னை விடுதலை அணைகிறது. ஆம், என் மயக்கங்களெல்லாம் இன்ப ஒளியில் எரிந்து போகும்; என் ஆசைகளெல்லாம் அன்புக் கனிகளாகப் பழுக்கும்.

16. கவிஞரின் மொழிகளுக்கு, மாந்தர், விருப் பப்படிப் பொருள் கொள்ளுகின்றனர். எனினும், அவற் றின் இறுதிப் பொருள், இறைவ, நின்னையே குறிக் கிறது.

17. இறைவனே, பொருள்களின் உள்ளத்தில் மறைந்திருந்து, விதைகள் முளை கிளம்ப ஊட்டுகிறாய், மொட்டுகளை மலர்ப்பிக்கிறாய், மலர்களைக் கனியாக்கு கிறாய்.

18. சாவே, வாழ்வின் இறுதி நிறைவே, வா; என் காதில் ஓது. ஒவ்வொரு நாளும் உன்னை எதிர் பார்த்திருந்தேன். உனக்காகத் தான் வாழ்வின் இன்ப துன்பங்களைப் பொறுத்திருந்தேன்; என் பெருமை, என் உரிமை, என் ஆசை, என் அன்பெல் லாம் ஆழ்ந்த அந்தரங்கத்தில் உன்னையே நோக்கின. முடிவாக ஒரு கண் பாராய்; என் உயிர் என்றும் உனக்கே யாகும். பூத் தொடுத்தாயிற்று; மணாள னுக்கு மாலை தயாராயுளது. மணவினையான பின் காதலி மனையை விடுத்துத் தனியே இரவின் ஏகாந்தத் தில் தனது நாதனைக் கூடுவாள்.

19. இங்கிருந்து செல்லும்போது, இதுவே என் இறுதி மொழியாகுக:—நான் கண்டது இணை யற்ற பொருள். ஒளிக் கடலில் விரிந்த இந்தத் தாமரையில் மறைந்த தேனைப் பருகினேன்; தன்ய

னேன். எண்ணிறந்த உருவங்கள் ஆடும் இந்த அரங்கத்தில் நானும் விளையாடினேன். இங்கு அருவான இறைவனை நான் கண்டுகொண்டேன்.

20. இறைவனே, நின்னுரை எளிது; நின்னை யுரைப்போர் பேச்சு அவ்வாறில்லை. நினது விண் மீன்களின் குரலும், நின் மரங்களின் மௌனமும் எனக்கு விளங்குகின்றன.

21. மனிதனே, நீ மொட்டை மலர்த்த முடியாது; நீ தொட்டால் அது மாசுறும்; மொட்டை மலர்த்த வல்லான் எளிதில் அவ்வாறு செய்கிறான். ஒரு பார்வை பார்க்கிறான்; அதன் நரம்புகளில் உயிர்த்தேன் ஊறித் ததும்புகிறது.

22. இவ்வுலகை எனது கண்களால், உறுப்புக் களால் கொஞ்சினேன்; அதை என்னுள்ளத்தில் எண்ணில்லாது கட்டி யணைந்தேன். உலகும் என்னுயிரும் ஒன்றாகும்படி இரவும் பகலும் என் எண்ணங்களால் வெள்ளமாக நிரப்பினேன்—என் உயிரை நேசிக்கிறேன்; ஏனெனில் என்னுடன் வானின் ஒளி நெய்யப்பட்டுள்ளது (woven).

23. இறைவனே, அபாயங்களினின்று காப்பாற்ற முறையிடாது, அவற்றை அஞ்சாது எதிர்க்கவே வேண்டுகிறேன்.

என் துன்பத்தைத் தணிக்க வேண்டேன்; அதை வெல்ல மனவுறுதி வேண்டுகிறேன்.

மனம் பதறி ரக்ஷிப்பை வேண்டேன்; என் சுதந்திரத்தைப் பெறும் பொறுமையே வேண்டுகிறேன்.

எனக்கு வெற்றி கிடைத்தால்தான் உனக்கு இரக்கமுள்ளது என்றுணரும் கோழையாகாது, தோல்வியிலும் என்னை நீ கைவிடவில்லை என்று காண அருள்.

24. பல வழிகளில் சென்று பல பொருள்களைக் குவிக்க வேண்டா; என் மனத்தைப் பலர் நுகத் தடிக்குக் குனியும்படி செய்ய வேண்டா. இறைவனே, உனது அடியான் என்னும் பெருமையும் துணிவும் கொண்டு நான் தலை தூக்க வருள்.

தாகூர் வாணியில் மிக்க உருக்கமானவை இவை. வள்ளுவர், இளங்கோ, கம்பர், தாயுமானவர், வள்ளலாருடனும் தாகூர் வாக்கைச் சீர்தூக்கி யுணர்க.

இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேன்
எனருசித்திட வலியவந்(து)
இன்பங் கொடுத்தநினை யென்நேர நின்னன்பர்
இடையறு துருகிநாடி,
உன்னிய கருத்தவிழ வுரைகுளறி யுடலெங்கும்
ஓய்ந்தயர்ந் தவசமாகி,
உணர்வரிய பேரன்பர் அநுபூதி யுணர்விலே
உணர்வார்கள்; உள்ளபடிகாண்,
கன்னிகை யொருத்திசிற் றின்பம்வேம் பென்னினும்
கைக்கொள்வள் பக்குவத்தில்,
கணவனருள் பெறின்முனே சொன்னவா [றென்னெனக்
கருதிநகை யாவளதுபோல்,
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை
தோற்றிற் சுகாரம்பமாம்,
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (தாயுமானவர்)

சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றிய

அன்பு நிலய நூல்கள்

			ரூ.	அ.	பை.
1.	பைந்தமிழ்ச் சோலை	...	0	4	0
2.	இராமலிங்க விஜயம்	...	0	10	0
3.	இன்பமாலை	...	0	5	0
4.	உடலுறுதி	...	(அச்சில்)		
5.	தர்ம ஸாதனம் (மூலம்)	...	0	3	0
6.	பொது நெறி (மூலம்)	...	0	1	0
7.	திருக்குறள் இன்பம்	...	(அச்சில்)		
8.	இன்று மனிதனும் இனிவரும் மனிதனும்	...	0	2	0
9.	கம்பக் கவியின்பம்	...	(அச்சில்)		
10.	அமுதத் தமிழ்	....	(அச்சில்)		
11.	தேசாஞ்சலி	...	(அச்சில்)		
12.	அப்பரின் அன்பு வெற்றி	...	0	10	0

கிடைக்கும் இடங்கள் :—

1. *Manager*: 'ANBU NILAYAM',
RAMACHANDRAPURAM POST,
TRICHINOPOLY DT.

2. THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD.,
TINNEVELLY & MADRAS.